ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1966/4 - 2016 මැයි මස 09 වැනි සඳුදා - 2016.05.09

1966/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம் : 3/කටා/ඉ.අත්/77.
காணி அமைச்சின் இலக்கம் : 4/3/4/2011/ඕ/187.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், கட்டான பிரதேச செயலாளர் பிரிவில், துனகஹபத்துவ சிறு பிரிவில், உத்துரு கதிரான கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ඔ.පී. ගම්: 3906 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.8133 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: இம்புள்கஸ்வாடியவத்தை; விபரம்: வீட்டுத் தோட்டம். 6 நிரந்தரக் கட்டிடங்கள், தற்காலிக 2 கட்டிடங்கள், நீர்த் தாங்கியும் சீமெந்தினால் கட்டப்பட்ட ஒரு கிணறும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.8133 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, கட்டான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்துதல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கே.ஜீ.எச்.எச்.ஆர். கிறிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலகம்,
கட்டான,
2016, மே 04.

5 - 751

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/156.
காணி அமைச்சின் இல.: 4-3/7/2013/டபிள்யூ.எச்/576.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில், திம்புளை கோரளை சிறு பிரிவில், கொடிகக பிரிவு இல. 6, புதிய கடை வீதி, நுவரெலியா கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபரால் தயாரிக்கப்பட்ட இலக்கம் பி.பி.நு 3038 மற்றும் 29.10.2015 ஆம் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட மொத்த அளவின் 0.0018 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டுகளின் விபரங்கள்:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: ராவனாவத்தை; விபரம்: பாதை; ஆரம்ப உரிமை கோருவோர்: அரசு; விஸ்தீரணம்: 0.0018 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எஸ்.பி.கே. போதிமான்ன,
பிரதேச செயலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2016, மே 02.

5 - 752

## திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம் : KOLDS/LND/05/ACQ/46.
காணி அமைச்சின் குறிப்பிலக்கம் : 4/3/9/2012/WS/72.

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் 2016, சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1951/9 இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் இலக்கம் 2-245 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளை அகற்றி அதற்குப் பதிலாக வேறொரு திகதியை குறிப்பிட்டு கீழ்க்காணும் வகையில் திருத்தப்படுகிறது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

| அகற்றப்படவேண்டிய திகதி | மாற்று திகதி |
|---|---|
| 2016.02.24 | 2016.07.13 |
| 2016.02.17 | 2016.07.05 |

எஸ்.எம்.டீ.பீ. சமரசேகர,
பிரதேச செயலாளர்,
கொலொன்ன.

பிரதேச செயலகம்,
கொலொன்ன,
2016, ஏப்பிறல் 28.

5 - 753

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.